12.03.2026

O.S.No.88/2012

வா.சா.2.திரு.பால்சாமி, த.பெ.திரு.பெரியாண்டி.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதிகள் குடியிருக்கும் ஊரில்தான் நானும் குடியிருக்கேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க எனக்கு சம்மன் வரவில்லை. வாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் ஆமாம். நானும் வாதிகளும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் ஆமாம். இறந்து போன 1ம் வாதி பாண்டியம்மாள் என்பவரின் தாத்தா பெயர் என்னவென்றால் தெரியாது. பாண்டியம்மாள் என்பவரின் அப்பா தான் ரெங்கன் என்றால் ஆமாம். ரெங்கன் என்பவருக்கு 2 சகோதரர்கள் உள்ளனர் என்றால் எனக்கு தெரியாது. ரெங்கன் தனக்குரிய பாகத்தை 1958ம் ஆண்டு விற்பனை செய்து விட்டார் என்பதை தெரியுமா என்றால் விற்பனை செய்தது தெரியாது ஆனால் ரெங்கன் உழுதுக்கொண்டிருந்தது தெரியும். ரெங்கனின் சகோதரர்களின் வாரிசுகளிடம் இருந்து 1,2 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை கிரையம் வாங்கியுள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். ரெங்கனின் சகோதரர்களின் வாரிசுகள்தான் 3 முதல் 13 பிரதிவாதிகள் என்றால் ஆமாம். தற்போது பல ஆண்டுகளாக தாவா நிலங்கள் தரிசுகளாக உள்ளது என்றால் ஆமாம் 1970, 1980களில் பாண்டியம்மாள் உழுதார். 06.01.2010ம் தேதி 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்தை கிரையம் வாங்கியதில் இருந்து தாவா சொத்தின் அனுபவம் 1, 2 பிரதிவாதிகள் வசத்தில்தான் உள்ளது என்றால் யாரும் விவசாயம்

செய்யவில்லை சும்மாதான் உள்ளது. 1ம் வாதி தாவா சொத்தை விவசாயம் செய்தார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

**<u>10, 12, 13 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தாவா சொத்தில் உரிமை இருந்ததால்தான் 10, 12,13 பிரதிவாதிகள் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தை வாதிகள்தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொல்லுவது தவறு என்றாலும் தாவா சொத்து தரிசாக உள்ளது என்றாலும் தாவா சொத்து தற்போது தரிசாக உள்ளது. 1970, 1980 ஆண்டுகளில் பாண்டியம்மாள் அனுபவம் செய்தார். தாவா சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் எனக்கு தெரியாது. நான் வாதிகளுக்கு உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.